# கிண்டி மெட்ரோவில் சீருந்து வசதி அறிமுகம்



சென்னை, ஜன. 2– கிண்டி மெட்ரோ நிலையத்தில் சீருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில் வரும் பயணியருக்கு வசதியாக, குறைந்த கட்டணத்தில், முக்கிய நிலையங்களில் ஷேர் ஆட்டோ, டாக்சி, வேன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. படிப்படியாக அனைத்து நிலையங்களிலும், இவ்வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, சீருந்து வசதி, கிண்டி மெட்ரோ நிலையத்தில் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சீருந்தில், ஆறு பேர் பயணம் செய்யலாம். 10 ரூபாய் கட்டணத்தில், நந்தம்பாக்கம் வழியாக, டி.எல்.எப்., வரை சென்று வரலாம்.

படிப்படியாக, அனைத்து மெட்ரோ நிலையங்களிலும் சீருந்து வசதி அறிமுகம் செய்யப்பட உள்ளது.